**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

OS. 98/2022

பெயர் : ஜெயக்குமார் (PW2) (Cross)

த/க/பெ. :

தேதி :01.07.2025

சாட்சி நீதிமன்றம் ஆஜராகி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் 2ம் வாதி குள்ளன் மகன் தான். அஞ்சலை மகன் தான் குள்ளன். மகள்கள் பட்டு, வன்னிச்சியம்மாள். பட்டு வாரிசுகள் தான் 4 முதல் 7 வாதிகள். 4, 5 வாதிகள் கும்பகோணம் தாலுக்கா, தட்டுமாள் கிராமத்தில் நிரந்தரமாக வசிக்கிறார்கள் என்றால் சரிதான். வழக்கு சொத்து அஞ்சலையம்மாளுக்கு சொந்தம் என்ற வகையில் தான் வழக்கு போட்டுள்ளார்கள் என்றால் சரிதான். அவருக்கு நத்தம் பட்டா வழங்கப்பட்டது. பட்டா மனை வாரி தோராய பட்டா அது செல்லாது என்றாலும் சரியல்ல. வீட்டு மனை பட்டா. 7ம் வாதி ரவி 5 மா நிலம் உள்ளது என்றால் சரிதான். அவர் அதில் விவசாயம் செய்து வருகிறார் என்றால் இருக்கலாம். அவர் honda Activa ஸ்கூட்டி வைத்துள்ளார்என்றால் சரிதான். முந்தைய நீதிமன்ற உத்தரவுகளும் வீட்டு மனை பட்டா, வீட்டு வரி ரசீதுகள் தாக்கல் செய்துள்ளேன். சாட்சி மீண்டும்இந்த வழக்கில் தாக்கல் செய்வில்லைஎன்கிறார். மாண்புமிகு உயர் நீமன்றத்தில் வழக்கு சொத்து யாருக்கு சொந்தம்எ ன்பதை விசாரணை செய்யவேண்டும்எ ன்று தீர்ப்பாகி உள்ளது என்றால் சரிதான். அஞ்சலைக்கு சொந்தம் என்பதற்கு சொந்தம் என்பதற்கு புது ஆவணம் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 35 ஆண்டுகளாக அஞ்சலை சொத்தில் வசித்து வந்தார் என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லஎன்றால் சரியல்ல. அஞ்சலை இறந்தது 2016, 2017 இருக்கும் இறப்பு சான்று தாக்கல் செய்யவில்லை. அஞ்சலை குடியிருப்பதாக சொல்லப்படும் வீடு இடிந்தது குறித்து இந்த வழக்கில் சொல்லவில்லை. எந்த ஆண்டு அஞ்சலை அவர் மகனான என் தந்தை வீட்டிற்கு வந்தார் என்பதை இந்த வழககில் சொல்லவில்லை. ஏற்கனவே அஞ்சலை சொத்தின் உரிமை உள்ளதாகவும், பிரதிவாதி இடையூறு செய்யக்கூடிடாது என்றும் வழக்கு போட்டிருந்தார் என்றால் சரிதான். சீர்காழி மாவட்ட உரிமையில் நீதிமன்றத்தில் அஞ்சலைக்கு பாதகமாகவும், சார்பு நீதிமன்றத்தில் அவருக்கு சாதகமாகவும தீர்ப்பானது என்றால் சரிதான். பிரதிவாதி தாக்கல் செய்த 2 வது மேல் முறையீடு உரிமை மற்றும் அனுபவம் நிரூபிக்க

படாததால் உரிமையை நிரூபிக்க புதிய வழக்கு போடலாம் என்று தீர்ப்பானது என்றால் சரிதான். மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்ற உத்தரவின் படி உரிமை மூலத்திற்கான புதிய ஆவணம் எதுவும் தாக்கல் செய்யாததால் இந்த வழக்கு நிலைக்க கூடியது அல்ல என்றால் சரியல்ல. உயர் நீதிமன்ற தீர்ப்பிற்கு முரணாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதால்சட்டபடி செல்லாது என்றால் சரியல்ல. மனைவாரி தோராய பட்டா செல்லாது என்று ஏற்கனேவ 2 வது மேல் முறையீட்டில் தீர்ப்பாகி உள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கு செல்லதக்கது என்றால் சரியல்ல. வழக்கு நடத்துவதற்கு மற்ற வாதிகள் எழுத்துமூலமான அனுமதி கொடுத்துள்ளார்கள் அதை தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 02.09.1997 ல் 1 முதல் 3 வாதிகளுக்கு கொடுத்த பட்டாவை தாக்கல் செய்யவில்லை. அஞ்சலையம்மாள் 1985 முதல் தாவா சொத்தில் 35 ஆண்டுகளாக வசித்து வந்தார். மகன் வீட்டில் அஞ்சலையம்மாள் எத்தனை ஆண்டுகள் வசித்தார் என்ற விபரத்தை பிராதில் சொல்ல வில்லை. தாவா சொத்தின் வடக்கு புறம் பிரதிவாதி வீடு என்றால் சரிதான். அந்த மனை சுமார் 10 செண்ட் இருக்கும் என்றால் சரிதான். 1997 ல் அந்த மனைக்கு அவருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தில் கட்டடம் கட்ட போவதாக எந்த தேதியில் பிரதிவாதி மிரட்டினார் என்று குறிப்பிடவில்லை. அடிக்கடி மிரட்டுவார். சென்னை உயர் நீதிமன்ற தீர்ப்பில் இருதரப்பும் உரிமை மற்றும் அனுபவத்தை நீரூபிக்கபடவில்லை என்று சொல்லப்படவில்லை என்றாலும் அஞ்சலையம்மாள் உரிமை மற்றும் அனுபவத்தை நிரூபிக்கவில்லை என்ற முறையில் தான் வழக்கு தள்ளுபடி செய்ப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அஞ்சலையம்மாள் பழைய வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் போதுமானதாக இல்லை என்ற அடிப்படையில் தான் சென்னை உயர் நீதிமன்றத்தில் தீர்ப்பாகி உள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் உள்ள வேலி கருவை மரங்கள் பிரதிவாதிதான் அனுபவத்து வருகிறார் என்றால் சரியல்ல. நாங்கள் தான் அனுபவித்து வருகிறோம். தாவா சொத்தில் வாதிகளுக்கு எந்த உரிமையும் அனுபவமும் கிடையாது என்றால் சரியல்ல. பிராதில் கேட்டுள்ளப்படி எந்த விளம்பல் பரிகரமும், வச பரிகாரமும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கிடைக்ககூடியது அல்ல என்றால் சரியல்ல. சொத்தில் உரிமை மூலத்தை பொறுத்து புதிய ஆவணம் தாக்கல் செய்யாமல் விளம்புகை பரிகாரம் கேட்க இலயாது என்றால் சரியல்ல. 2ம் வாதி, மற்ற வாதிகள் நல்ல நிலையில் இருக்கிறார்கள் என்றாலும்

அவர்கள் சாட்சியம் அளித்தால் வழக்கில் பாதகமாகி விடும் என்பதால் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதிகள் அனைவரும் நல்ல நிலையில் உள்ள போது அவர்கள் சார்பாக நான் சாட்சியம் அளிப்பது ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. சரியான உரிமை மூலங்களின் அடிப்படையில் பிரதிவாதிக்கு சொத்து சொந்தமாகி அவர் அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல வாதிகள் போட்டுள்ள வழக்கு பொய்யானது என்பதால் வழக்கு தள்ளுபடி செய்யக்வடியது என்றால் சரியல்ல.